வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 02.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை, முக்கிய சீர்திருத்தம் என்பதற்கு அப்பாற்பட்டு, நாட்டின் அறிவுசார் மறுமலர்ச்சியாகவே அமைந்து இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அடிப்படையிலான, 2025ஆம் ஆண்டு வக்ஃபு திருத்த மசோதா, இன்று மக்களவையில், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இளைய சமுதாயத்தினர், நாட்டிற்கே முதலிடம் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும் என, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகளுக்கான அதி நவீன IVF கருப் பரிமாற்ற தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளது.

-------------------------

மோடி கல்வி (18)

2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை, முக்கிய சீர்திருத்தம் என்பதற்கு மேல், நாட்டின் அறிவுசார் மறுமலர்ச்சியாகவே அமைந்து இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். கல்வி மற்றும் புதுமையாக்கம் மூலமாக இந்தியாவை, உலக அளவிலான போட்டித் திறனுடன் கூடிய சுயசார்பு நாடாக மேம்படுத்த, தேசிய கல்விக் கொள்கை,

வழி வகுப்பதாகவும் அவர் கூறியுள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்கள் குறித்து, பத்திரிக்கை ஒன்றில், மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் எழுதியுள்ள கட்டுரை ஒன்றையும், பிரதமர், சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இதற்கிடையே, கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் கல்வித் துறை, சரியான பாதையில் இருந்து மாறிவிட்டதாக கூறப்படுவது, முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று, கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் மறுப்பு தெரிவித்துள்ளார். கடந்த காலத்தில், ஊழல் மற்றும் நிர்வாகப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டு இருந்த கல்வித் துறையில், உறுதியான முறையில், சரியான பாதைக்கு மாற்றியதே தேசிய கல்விக் கொள்கைதான் என்றும், இக்கொள்கை, காலனி ஆதிக்க மனோபாவத்தில் இருந்து, கல்வித் துறையை விடுவித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

-------------------------

வக்ஃபு மசோதா 1 (16)

கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அடிப்படையிலான, 2025ஆம் ஆண்டு வக்ஃபு திருத்த மசோதா, இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, மசோதாவை அவையில் கொண்டு வந்து பேசுகையில், வக்ஃபு வாரியங்கள் தொடர்பான சொத்துக்கள் குறித்து மட்டுமே இம்மசோதாவில் பேசப் படுவதாகவும், முஸ்லீம்களின் மத நடைமுறைகளுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் கூறினார். இம்மசோதா, எவருடைய சொத்துக்களையும் பறிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்றும், வக்ஃபு வாரியங்களை, அனைவரையும் உள்ளடக்கிய, மதசார்பற்ற அமைப்புகளாக மாற்றவே, அரசு விரும்புவதாகவும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் எந்த ஒரு நிலத்தையும் வக்ஃபு சொத்தாக அறிவிக்க, தற்போதுள்ள சட்டத்தின் விதிமுறைகள் தவறாக பயன்படுத்தப் பட்டுள்ளதாக, அமைச்சர் கூறினார். இந்தியாவில், உலகிலேயே அதிக அளவில் வக்ஃபு சொத்துக்கள்

இருந்தும், இந்திய முஸ்லீம்கள், ஏழைகளாக நீடிப்பது எப்படி என அவர் வினவினார். விவாதங்கள் குறித்து கூடுதல் விவரங்கள்…

*வக்ஃபு மசோதா* 2 (18)

வக்ஃபு திருத்த மசோதாவிற்கு எதிராக, மக்களவையில், எதிர்கட்சிகள் வெளியிட்ட கருத்துக்களுக்கு, மத்திய உள்துறை அமைசசர் திரு. அமித் ஷா பதில் அளிக்கையில், கூட்டு நாடாளுமன்றக் குழுவினரின் விரிவான விவாதங்களுக்கு பின்னர், மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுடன், மசோதா கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். முன்னதாக, காங்கிரஸ் உறுப்பினர் திரு. கவுரவ் கோகோய், விவாதங்களை தொடக்கி வைத்து பேசுகையில், வக்ஃபு திருத்த மசோதா அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும், சிறுபான்மையினரை களங்கப்படுத்தி, இந்திய சமூகத்தில் பிளவு ஏற்படுத்த, அரசு முயல்வதாகவும் குற்றம் சாட்டினார். விலைவாசி உயர்வு போன்ற பிரச்சனைகளில், தோல்வியை மறைக்கவே, வக்ஃபு மசோதாவை, அரசு கொண்டு வந்து இருப்பதாக சமாஜ்வாதி கட்சியை சேர்ந்த திரு. அகிலேஷ் யாதவ் குற்றம் சாட்டினார். திமுக உறுப்பினர் திரு. ஆ. ராசா விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு-வின் பேச்சு, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கைக்கு பொருத்தமாக இல்லை என்றும், அப்படி இருந்தால் தாம் ராஜினாமா செய்ய தயார் என்றும் கூறினார். திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த திரு. கல்யாண் பானர்ஜி, பாரதீய ஜனதாவைச் சேர்ந்த திரு. ரவிசங்கர் பிரசாத் உட்பட பல்வேறு உறுப்பினர்களும் விவாதங்களில் பங்கேற்று பேசினர்.

--------------------------

*மசோதா கருத்து (15)*

இதற்கிடையே, சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வக்ஃபு திருத்த மசோதா, நாட்டின் நன்மைக்கானது என்றும், கோடிக் கணக்கிலான முஸ்லீம்கள் மட்டுமின்றி, நாடு முழுவதும் இம்மசோதாவை ஆதரிக்கும் என்றார்.

மத்திய சமூக நீதித் துறை இணையமைச்சர் திரு. பீஎல் வர்மா, இதேபோன்ற கருத்துக்களை வலியுறுத்தி பேசுகையில், அனைவருக்கும் ஆதரவு-அனைவருக்கும் வளர்ச்சி என்பதே, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நோக்கம் என்றார்.

வக்ஃபு திருத்த மசோதாவில், எதிர்கட்சிகளின் ஆலோசனைகளை அரசு ஏற்கவில்லை என்று, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிரமோத் திவாரி குற்றம் சாட்டினார். தற்போதுள்ள வடிவத்திலேயே மசோதா நிறைவேற்றப் பட்டால், அரசியல் சாசனத்தின் அடிப்படை உணர்வுகளுக்கு எதிராக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வக்ஃபு திருத்த மசோதாவை ஐக்கிய ஜனதா தளம் ஆதரிக்கும் என்று, ஜேடி-யு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ஜா கூறினார்.

-------------------------

*அமித் ஷா (7)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வரும் 7-8 ஆகிய தேதிகளில், ஜம்மு-காஷ்மீருக்கு பயணம் மேற்கொண்டு, பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து உயர்நிலை மறு ஆய்வு கூட்டம் நடத்த இருக்கிறார். இப்பயணத்தின் போது, பாதுகாப்புப் படையினரை உள்துறை அமைச்சர் சந்தித்து கலந்துரையாடுவார் என்றும், எல்லைப் பகுதிகளுக்கு அவர் நேரில் சென்று பார்வையிடக் கூடும் என்றும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

--------------------------

*இளையோர் நாடாளுமன்றம் (9)*

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில். இளைஞர்களுக்கு முக்கிய பங்கு இருப்பதால், இளைய சமுதாயத்தினர், நாட்டிற்கே முதலிடம் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும் என, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், விக்சித் பாரத் இளையோர் நாடாளுமன்ற நிகழ்ச்சியில், அவர் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வெளியாகும் கருத்துக்கள், இளையோர் தலைமையிலான கொள்கை உருவாக்கம் மூலமாக தேசிய வளர்ச்சியை எட்டுவதில், புதிய யுகத்திற்கு வழி வகுக்கும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

--------------------------

*கால்நடை 1 (17)*

புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகளுக்கான அதி நவீன IVF கருப் பரிமாற்ற தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக பயன்படுத்தியதன் மூலம், கணுவாப்பேட் கிராமத்தில், விவசாயிகளுக்கு சொந்தமான 2 கலப்பினப் பசுக்கள், அதிக உற்பத்தித் திறன் கொண்ட, 2 உயர் மரபணுக் கன்றுக் குட்டிகளை ஈன்றெடுத்துள்ளன. புதுச்சேரியில் இத்தகைய வாடகைத் தாய் முறையில் கன்றுகள் பிறப்பது இதுவே முதல் முறையாகும். புதிய வகைக் கன்றுகள் முதிர்ச்சி அடையும் போது, நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் பால் தரக் கூடியதாக இருக்கும் என்றும், இத்தகைய

கறவை மாடுகள், இதே இனப்பெருக்க தொழில்நுட்பத்தை தொடர்ந்து செயல்படுத்தப் பயனுள்ளதாக இருக்கும் என்றும், கால்நடை பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மற்றும் நோடல் அதிகாரி டாக்டர் குமரன் தெரிவித்தார்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், IVF கருப் பரிமாற்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 350 பசுக்களில், 125 பசுக்களுக்கு கருக்கள் பொருத்தப் பட்டதாகவும், இதில் 31 பசுக்களில், கருத்தரித்தல் பரிசோதனை வெற்றிகரமாக அமைந்து இருப்பதாகவும் அவர் கூறினார். புதுச்சேரியில் எட்டப் பட்டுள்ள 25 சதவிகித வெற்றி விகிதம், தேசிய சராசரியை விட அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

*கால்நடை 2 (6)*

IVF தொழில்நுடபத்தை செயல்படுத்த, ஒரு பசுவிற்கு 21 ஆயிரம் ரூபாய் செலவாகும் மதிப்பிடப் பட்டுள்ளதாக இணை இயக்குநர் தெரிவித்தார். இதில், தேசிய கோகுல் இயக்கத்தின் கீழ், மத்திய அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபாய் மானியம் போக, எஞ்சிய 16 ஆயிரம் ரூபாயை, புதுச்சேரி அரசு, தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்குவதாக அவர் கூறினார். டாக்டர் குமரன் மேலும் கூறுகையில்....

(வாய்ஸ்)

-------------------------

தேர்வு-ஒத்தி வைப்பு (7)

புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையில், திறன் பெற்றிராத அலுவலக ஊழியர் பணியிடங்களை நிரப்ப, வரும் 6ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்த செய்முறைத் தேர்வு, நிர்வாகக் காரணங்களுக்காக, ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. புதிய தேதி, மற்றும், நேரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை தெரிவித்துள்ளது.

-------------------------

*வானிலை (12)*

வரும் 5ஆம் தேதி வரை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை, ஒருசில இடங்களில், 2 முதல், 3 டிகிரி செல்சியஸ் வரை, படிபடியாக குறையக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உள் தமிழகத்தின் வடகிழக்கு பகுதிகளில், வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை உயரக் கூடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. குமரிக் கடல் மற்றும் லட்சத் தீவு பகுதிகளின் மேல், 2 வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் நிலவுவதால், இன்று முதல், வரும் 5ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 4ஆம் தேதி வரை, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை உள்ளடக்கிய தென் மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------

*ஐபிஎல் (4)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, பெங்களூரில் நடைபெறும் போட்டியில், பெங்களூரு – குஜராத் அணிகள் மோத உள்ளன. லக்னோவில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

--------------------------

*கால்பந்து (7)*

அர்ஜென்டினாவின் பியூனஸ் அய்ரஸ் நகரில், நாளை தொடங்கும், ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டிகளில், 43 உறுப்பினர் இந்தியக் குழு, மனு பாக்கர் தலைமையில் பங்கேற்க உள்ளது. சவ்ரப் சௌத்ரி, அனீஷ் பன்வாலா, விஜய்வீர் சித்து, ப்ரித்விராஜ் தொண்டைமான் உள்ளிட்டோர், இதில் அடங்குவர். 45 நாடுகளில் இருந்து, 400க்கும்

மேற்பட்ட வீரர்-வீராங்கனைகள், இப்போட்டிகளில், பல்வேறு பிரிவுகளின் கீழ் பங்கேற்கிறார்கள்.

--------------------------

ஜெம் (13)

அரசுத் துறைகள் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதற்கான, ஜெம் இணைய தளம் மூலம், கடந்த நிதியாண்டில், 10 லட்சம் மனிதவள ஆதாரங்கள், வேலைக்கு எடுக்கப் பட்டுள்ளதாக, ஜெம்-மின்னணு சந்தையின் தலைமை செயல் அதிகாரி திரு. அஜய் பாடூ தெரிவித்துள்ளார். இணைய தளம் மூலம் வேலைக்கு ஆள் எடுப்பதால், ஆள் எடுக்கும் நடைமுறைகள் எளிமையாகி இருப்பதுடன், தொழிலாளர் சட்ட விதிமுறைகள், முழுமையாக பின்பற்றப் படுவதையும், உறுதிப்படுத்த முடிந்து இருப்பதாக, அவர் இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். ஜெம் இணைய தளத்தின் இந்த சாதனை, பொதுக் கொள்முதல் பணிகளை, வெளிப்படையான விதத்தில், திறம்பட்ட முறையில் மேற்கொள்வதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டையே பிரதிபலிப்பதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் கூறியுள்ளது.

--------------------------

2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை, முக்கிய சீர்திருத்தம் என்பதற்கு அப்பாற்பட்டு, நாட்டின் அறிவுசார் மறுமலர்ச்சியாகவே அமைந்து இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அடிப்படையிலான, 2025ஆம் ஆண்டு வக்ஃப்பு திருத்த மசோதா, இன்று மக்களவையில், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இளைய சமுதாயத்தினர், நாட்டிற்கே முதலிடம் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும் என, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகளுக்கான அதி நவீன IVF கருப் பரிமாற்ற தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளது.